අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/4/58/16/01/13(I)
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2025.08.

பெயர் ..................................................... ஆசன இலக்கம் ...................

தே.அ.அ இலக்கம் ...................................................

ஐயா/ அம்மணி,

**<u>இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2021(2023) நியமனக் கடிதம் வழங்குதல்</u>**

இலக்கம் 1925/37 மற்றும் 2015.07.28ம் திகதியுடைய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் 2231 மற்றும் 2021.06.04 ம் திகதியுடைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய, இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2020/2021 மூலம் 442 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்பட்ட எழுத்து மூலப் பரீட்சை மற்றும் வாய்மொழி மூலப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் முன்னுரிமை மற்றும் தங்களால் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பு வரிசைக்கமைய, ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து தாங்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கு நியமிப்பதற்கு தகுதி பெற்றுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

02. அதற்கமைய, இந்த நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் 2025.09.01ம் திகதி திங்கட் கிழமை மு.ப.10.00 மணிக்கு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கௌரவ பிரதமர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய அவர்களது தலைமையில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சில் நடாத்தப்படவுள்ளது. ஆகையால் குறித்த வைபவத்தில் கலந்துகொள்வதற்காக தாங்கள் அன்றைய தினம் **மு.ப 8.00 மணியளவில் தேசிய அடையாள அட்டை அல்லது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ஒன்று** சகிதம் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் 04ம் மாடியில் உள்ள கேட்போர் கூடத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.

03. அவ்வாறே, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைய தங்களது நியமனத்திற்குரிய தகைமைகளைப் பரிசோதிக்கும் திகதியான 2021.07.30ம் திகதி முதல் இது வரையில் ஒழுக்காற்று ரீதியில் தண்டனைகளைப் பெற்றுள்ளீர்களா/ குற்றப் பத்திரிகை

வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ஒன்றை **இணைப்பு 01 இன் படி வலயக் கல்விப் பணிப்பாளரூடாக பூரணப்படுத்தி நியமனக் கடிதம் வழங்கப்படும் தினமன்று கொண்டுவருவது கட்டாயமாகும்.** இம் மாதிரிப் படிவத்தைப் பூரணப்படுத்தி சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்களுக்கு அன்றைய தினம் நியமனக் கடிதங்கள் வழங்கப்படமாட்டாது என்பதையும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

04. இந்த நியமனக் கடிதம் வழங்கும் வைபவத்தில் கலந்துகொள்ளும் போது கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

I. ஆண் நியமனதாரர்கள் தேசிய உடை அல்லது ஐரோப்பிய உடையை அணிந்து சமூகமளிக்க வேண்டும் என்பதுடன் பெண் நியமனதாரர்கள் இளம் நிற சாரி அல்லது ஒசரி அணிந்து சமூகமளிக்க வேண்டும்.

II. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசன இலக்கத்திற்கமைய உரிய இடத்தில் அமர வேண்டும்.

III. இந்த நியமனம் வழங்கும் வைபவத்தில் நியமனதாரர் மாத்திரமே கலந்துகொள்ள வேண்டும் என்பதுடன், வேறு எந்தவொரு வெளித் தரப்பினரையும் நியமனம் வழங்கும் வைபவம் நடைபெறும் மண்டபத்தினுள் அழைத்து வருவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

IV. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 12.2.(ii) இற்கமைய தங்களால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய சேவை ஆரம்ப பயிற்சியானது நியமனம் வழங்கப்படும் தினமன்றே ஆரம்பிக்கும் என்பதால் தாங்கள் அதற்காக இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாராகி சமூகமளித்தல் வேண்டும்.

V. அத்துடன் இந்த நியமனக் கடிதம் வழங்கும் வைபவத்தில் கலந்துகொள்ளும் போது கீழ்வரும் ஆவணங்கள் சகிதம் சமூகமளிப்பது கட்டாயமாகும்.

- தங்களது தேசிய அடையாள அட்டையுடன் அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று
- இறுதியாக செலுத்தப்பட்ட சம்பளப் படிவத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று
- தங்களது சம்பளம் வைப்பிலிடப்பட வேண்டிய கணக்கிலக்கம் உள்ளடங்கிய வங்கிக் கணக்குப் புத்தகத்தின்/ மாதாந்த கணக்குக் கூற்றின் பிரதியொன்று

- 2025 செப்டெம்பர் மாதம் முதல் தங்களது சம்பளம் வைப்பிலிடப்படவேண்டிய கணக்கிற்குரிய வங்கிக் கணக்குப் புத்தக இலக்கம், கணக்கு உரித்தான கிளை, தங்களது பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட தங்களது வங்கிக் கணக்கின் விபரங்களை அறியத் தருவதற்காக இவ் அமைச்சின் பிரதம நிதி அதிகாரியிடம் கோரிக்கை விடுப்பதற்கான கடிதம் (இணைப்பு 03 மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)

05. மேலே 04. IV பந்திக்கமைய, சேவை ஆரம்ப பயிற்சியானது நியமனம் வழங்கப்படும் தினமன்றே ஆரம்பிக்கவிருப்பதால், இக் கடிதத்தின் பிரதியொன்றை தங்களது நிறுவனத் தலைவரூடாக நியமன அதிகாரிக்கு அனுப்பி, தாங்கள், இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 2025.09.01ம் திகதி முதல் கடமைகளைப் பொறுப்பேற்க கூடிய வகையில் 2025.08.31 ம் திகதி முதல் தற்போதைய சேவை நிலையத்திலிருந்து வெளியேறுவதாக உரிய நிறுவனத் தலைவர்களை அறிவுறுத்திய பின்னர் சமூகமளிக்குமாறும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

06. இதற்காக பிரயாணச் செலவுகளோ அல்லது வேறு கொடுப்பனவுகளோ செலுத்தப்படமாட்டாது.

ஒப்பம்: நாலக களுவெவ
செயலாளர்

கே.கே.பீ ஆரியசிங்ஹ
மேலதிக செயலாளர் (கல்விச் சேவைகள் தாபனம்)

கவனத்திற்கு: 2025.09.01ம் திகதியன்று நியமனக் கடிதம் வழங்கும் வைபவத்தில் கலந்துகொள்வதற்காக அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாத உத்தியோகத்தர்கள் இக் கடிதத்தை அமைச்சின் இணையத் தளத்தின் (www.moe.gov.lk) ”விசேட அறிவித்தல்” பகுதியில் இருந்து பதிவிறக்கம் செய்து பிரதியொன்றை கொண்டுவருவது போதுமானது.